# " அரசு கூறுவதை மக்கள் நம்பவில்லை "

(லண்டன்)
ஆனையிறவு மோதல் பற்றிச் சிறிலங்கா அரசாங்கம் கூறுவதை எவருமே நம்பவில்லை என கொழும்பில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப் பொன்று தெரிவிப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு தனது செய்தி விமர்சனத்தில் அறிவித்தது.

சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த சில நாட்களாக செய்திகளை இருட்டடிப்புச் செய்துவருகின்றனர். இதனால் பலவிதமான வதந்திகள் அடிபடுகின்றன. விடுதலைப் புலிகளின் தாக்குதலால் இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னேற மறுப்பதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை கொழும்பில் நடாத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப் பொன்று சொல்லப்பட்ட ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் பத்தும் புலிப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்ற அரசு கூறுவதை ஒருவருமே நம்பவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்; 04 விலை ரூபா: 4:50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 12 (28 07 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 160

## பதிவு செய்யாதோருக்கு தனி முகாம்கள்

(சென்னை)
தமிழகத்தில் அகதிமுகாம்களுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளில் தமிழக அரசின் உத்தரவிற்கேற்ப பதிவு செய்யாமலும், தகுந்த விளக்கம் அளிக்காமலும் இருந்தால் அவர்கள் தனியான முகாம்களில் வைக்கப்படுவார்கள் என்று மாநில காவல்துறை இன்ஸ்பெக்டர் தேவாரம் மதுரையில் செய்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு தடை முகாம் மீது புலிகள் உக்கிரத் தாக்குதல்

## குண்டுவீச்சால கோயிலை தேவாலயங்கள் சேதம்

(பருத்தித்துறை)
ஸ்ரீலங்கா விமானப்படையினரின் கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுக்களினால் சரித்திரப் பிரசித்தி பெற்ற மண்டலாய் விநாயகராலயமும், செபஸ்தியார் தேவாலயமும் பலத்த சேதமடைந்துள்ளன.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றபோது ஆலய இராஜ கோபுரத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி விழுந்து நொறுங்கியதுடன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவின் பின்பும் மோதல் நீடிப்பு

ஆனையிறவு தடைமுகாம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் உக்கிர மோதல் நடைபெறுகின்றது. நேற்றிரவு சுமார் 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு தடைமுகாமின் ஒரு பகுதியான குறிஞ்சாத்தீவு உப்பள விடுதி மீதும் தடைமுகாம் மீதும் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்தே இக்கடுஞ்சமர் ஏற்பட்டது. மிக அருகில் நின்று இருபகுதியினரும் கடும் துப்பாக்கிச்சண்டையில் ஈடுபடுகின்றனர். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மோதல் நடைபெற்றவண்ணமுள்ளது.

## மீண்டும் மோதல் வெடித்தது ; கவச வாகனம் பலத்த சேதம்

(முள்ளியான்)
முள்ளியான் பகுதியில் இராணுவத்திற்கும், புலிகளுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் மீண்டும் பலத்த மோதல் வெடித்தது. இம்மோதலின் போது புலிகளின் ரொக்கட் தாக்குதலினால் கவச வாகனமொன்று பலத்த சேதமடைந்தது.

கடந்த நான்கு நாட்களாக முள்ளியான் பகுதியில் தரித்து நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீண்டும் நேற்றுப் பிற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் தொடர்ந்தும் விமானக் குண்டு வீச்சு

[ஆனையிறவு]
சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அனைத்தும் நேற்று முழுவதும் ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதியில் தொடர்ச்சியான குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமான இக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மாலை வரை தொடர்ந்து இடம்பெற்றதாக களத்திலிருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். இத்தாக்குதலில் இர

### கரை ஒதுங்கிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரைக் கவனிக்க விசேட வைத்திய அதிகாரிகள்

(கொழும்பு)
ஆனையிறவில் நடைபெறும் யுத்தத்தில் காயமடையும் சிறிலங்கா இராணுவத்தினருக்கு சிகிச்சையளிப்பதற்கு விசேட வைத்திய அதிகாரிகள் குழுக்களை சுகாதார அமைச்சு நியமித்துள்ளதுடன் விரிவான மருத்துவ ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

கொழும்பு பெரியாஸ்பத்திரி மற்றும் அனுராதபுரம் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு விசேட வைத்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் சடலத்தின் கழுத்தில் தாலிக்கொடி

(வேலணை)
நேற்றுமுன்தினம் வேலணை துறையூர் கடற்பிரதேசத்தில் கரைசேர்ந்த கடற்படை வீரர்களின் சடலமொன்றின் கழுத்திலிருந்து சுமார் ஐந்து பவுண் நிறையுடைய தாலிக் கொடி ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எடுக்கப்பட்ட தாலிக்கொடியை வேலணை வட்டார தலைவரிடம் ஒப்படைத்த மக்கள் சடலங்கள் இரண்டையும் புதைத்துவிட்டனர்.

(14) (87)

## ஆனையிறவு சிப்பாய்களின் பெற்றோர்கள் அவமானம்

(வவுனியா)
ஆனையிறவு இராணுவ முகாமில் விடுதலைப்புலிகளின் முற்றுகைக்கு உட்பட்டு, தாக்குதலுக்குள்ளாகியுள்ள இராணுவத்தினரின் பெற்றோர்கள் வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தமது பிள்ளைகளின் தற்போதைய நிலைமை பற்றி வினா எழுப்பியுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

நேரடியாக வவுனியாவிற்கு வந்து இராணுவ அதிகாரிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 11 கரையோர மாவட்டங்களில் சிறப்புச் காவல் அமைப்பு

(சென்னை)
தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் உட்பட தமிழ் நாட்டின் பதினொரு கடலோர மாவட்டங்களிலும் சிறப்புக் காவல் அமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்று தமிழக காவல்துறை இன்ஸ்பெக்டர் தேவாரம் கூறியுள்ளார்.

செய்தியாளரிடம் மேலும் பேசிய அவர், தென்னாற்காடு தஞ்சாவூர், புதுக்கோட்டை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் திடீர்த் தாக்குதல் 7 இராணுவம், ஒரு ரெலோ பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் ஏழு இராணுவத்தினரும், ரெலோ குழுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை செங்கலடிக்கும், சித்தாண்டிக்குமிடையில் உள்ள ரயில் பாதையோரமாக இராணுவத்தினர் ரோந்து சென்ற சமயம் விடுதலைப் புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படையினரைச் சமுகமளிக்க கோரிக்கை

(நமது நிருபர்)
வலிகாமம் பிரிவைச் சேர்ந்த துணைப்படைப் பயிற்சி பெற்றவர்களையும், பயிற்சி பெற விரும்புபவர்களையும் 28 7.91 இன்று காலை 10-00 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

மலிவு விற்பனை
A/L, O/L, ஆண்டு 5 பரீட்சை களுக்கான, TUTES மலிவு விலையில் விற்பனையாகின்றன. BOND கல்வி நிறுவனம் 58 A, ஸ்ராலின் வீதி யாழ்ப்பாணம். (B/2868)

கல்வி

GCE (O.L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து விஷேட இந்திக்கு 40 மணித்தியாலத்தில் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், NO-10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி சுண்டுக்குளி. (R/1583)


# தீ மூட்டித் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாயைச் சேர்ந்த இளம் ஆசிரியை ஒருவர் தனக்குத்தானே தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த வியாழன் நண்பகலவில் சிவனேஸ்வரி (வயது 38) என்பவரே தனது உடல் முழுவதிற்கும் மண்ணெண்ணெயை ஊற்றிய பின் தனக்குத் தானே தீ மூட்டினார். இதனால் உடல் முழுவதும் எரிகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அன்று மாலை 2-30க்கு அங்கு மரணமானார். இவர் ஒரு மனநோயாளியெனத் தெரிவருகின்றது. (ச)

# கொர்பியின் திட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகாரம்

(மாஸ்கோ)

சோவியத் தலைவர் கொர்பசேவ் சமர்ப்பித்திருக்கும், பழைமைவாத மார்க்சியக் கோட்பாடுகளைக் கைவிடும் புதிய திட்டத்திற்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு பூர்வாங்க அங்கீகாரம் அளித்துள்ளது.

கட்சியில் புதிய மாற்றங்களைக் கொண்ட இத் திட்டத்திற்கு இறுதி அங்கீகாரம் வழங்குவதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் அவசர மாநாடு இந்த ஆண்டு நவம்பரில் அல்லது டிசம்பரில் கூட்டப்படும் என்றும் மத்திய குழு அறிவித்துள்ளது.

கொர்பசேவ் முன்வைத்த நவ திட்டத்தை ஏற்றுக்கொண்ட மத்திய குழுவின் ஏகோக பெரும்பான்மையினர் வாக்களித்திருப்பதாக டாஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

# கரை ஒதுங்கிய பெண்ணின் சடலம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்குக் கடற்கரையில் நேற்று முன்தினம் (26-07-91) காலை பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது. இது மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்த போதிலும் பெண்கள் அணியும் அரைச் சட்டை அணிந்திருந்ததால் இது பெண்ணின் சடலம் என்ற அடையாளம் காண முடிந்தது. மேலும் இதை அடக்கம் செய்யும் வேலையை மண்டைதீவு மக்களின் உதவியுடன் சிற்றூர் அவையினர் மேற்கொண்டுள்ளனர். (88)


# 45-வது நினைவு தினம்



## லெப்டினன்ட் ரவி

குமாரசாமி சாந்திக்குமார்

தோற்றம் 30-11-1972 மறைவு 14-06-1991

ஓ சாந்தி! எங்கே சென்றனை
உன் பிரியமான அன்னை தந்தையை
சோதரரை, கூடித்திரிந்த தோழரை எல்லோரையும் விட்டு
இளர்களில் உன் விருப்பு நீங்கிவிட்டதே!
சாந்தி!
இந்த மண்தான் உன் அன்னை
மண்ணில் வேதனைப்படும் மக்கள்தான் உன்தோழர்

மண்ணின் விடுதலைதான் உன் உறவு. அந்த உறவைத்தான் ஆயுளில் தழுவி விட்டாய் மாவீரர் வரிசையில் உனக்கும் இடமொன்று அமைத்துக்கொண்டாய் சாந்தி!

28-07-91 ஞாயிற்றுக்கிழமை (இன்று) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
இந்திரன் அம்மன் கோயில் வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(R/1578)

# ஆண்டு - 5

(புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை)

- ★ இப் பரீட்சைக்காக ஒவ்வொரு ஞாயிறும் பயிற்சிப் பரீட்சையை எமது நிறுவனம் நடாத்தி வருவது அனைவரும் அறிந்ததே.
- ★ போர்க்காலச் சூழல் காரணமாக பரீட்சையை நிறுவனத்தில் நடாத்தாது வினாத்தாள்களை அவ்வத் தினங்களில் எம்மிடம் பெற்றுச் செல்லலாம்.
- ★ மாணவர்கள் வினாத்தாள்களுக்கு வீட்டிலேயே விடையளித்து ஒப்படைத்தால் இலவசமாக திருத்திக் கொடுக்கப்படும்.

அடுத்த பரீட்சை 28-07-91, 04-08-91

பரீட்சைப் பகுதி
BOND கல்வி நிறுவனம்
58A, ஸ்ராலின் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/2867)

# ஆண் தாதியாளர் தேவை

தனியார் நிறுவனமொன்றில் தாதியாகப் பணிபுரிவதற்கும், நோயாளர்களைப்பராமரிப்பதற்கும் தாதிகள் தேவை.

- ★ வயதெல்லை: 23 வயதுக்கு மேல்.
- ★ புதிதாகச் சேர்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும்.
- ★ நியாயமான ஊதியம் வழங்கப்படும்.
- ★ உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
பாலம் பொதுப்பணித் தொடர்பகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (B/2863)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## விவசாய பீடம்

விவசாயபீட இரண்டாம் அரையாண்டின் இறுதிப் பகுதி விரிவுரைகள் 05-08-91இல் கிளிநொச்சியிலுள்ள விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

மாணவர்கள் அனைவரும் 04-08-91இல் கிளிநொச்சி விவசாயபீட விடுதிக்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்
(B-2869)

# நினைவு கூருகின்றோம்...

1991-07-28

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் எதிர்பாராத விபத்தினால் எமைப்பிரிந்த

❋ சுந்தர் (தட்சணாமூர்த்தி - சுத்தளாய்)

1989ஆம் ஆண்டு கொட்டடியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

1990ஆம் ஆண்டு தவறுதலாக நிகழ்ந்த மிதி வெடி விபத்தினால் எமைப்பிரிந்த

குள்ளா (உருத்திரமூர்த்தி - திருக்கோணமலை)

கட்டைபறிச்சானில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

பாபு (ஆ. மோகனசுந்தரம் - பதுளை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B- 2864)

# மலிவு விற்பனை

❋ காஸ்குக்கர்கள் ❋ பிளான்டர் & மிக்சிகள் ❋ சுவர்க்கடிகாரங்கள்
❋ மின்சாரகுக்கர்கள் & அயண் ❋ கேற்றில்கள் ❋ தையல் மெசின்கள்
❋ மின்சார விசிறிகள், வேறும்பல வீட்டுப்பாவனை பொருள்கள் யாவும் உடனடியாக மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

ஜெயா ஏல விற்பனைப் பகுதி

நவநீதம்

161, பிரதானவீதி – யாழ்ப்பாணம்.

(B/2862)

**◼ சிந்தனைக்கு ◼**

அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவதாகும்.
— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி. யாழ்ப்பாணம்; 28 07 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்; 025-2839 நிர்வாகபீடம்; 2298
த.பெ எண் 65


# சுதந்திர உணர்வையடக்க ராணுவ பலம் பயன்படாது

ஆனையிறவும் பெரும் போர் ஆரம்பித்து பதினெழு தினங்கள் நடைபெற்றும் போர் முடிவிற்கு வரவில்லை. சில நாட்கள் போர் தணிந்திருப்பினும் அது போருக்கான தயாரிப்புக் காலமாகவுள்ளதே ஒழிய போர் ஓய்வுக்கான முன்னறிவித்தல் அல்ல.

இப்போர், ஒரு பெரும் போராக வாரங்கள் நீடிக்கும் என்பது விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் எதிர்பார்த்ததுதான். இதன் காரணமாக போர் நீடிப்பும் போர் முனைச் செய்திகளும் தமிழ் மக்களுக்கு பெரும் அதிர்ச்சிகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் விரைவான வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்ற உந்துதல் மட்டும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமும் அரசியல்வாதிகளும், வெகுசனத் தொடர்பு சாதனங்களும் இப்போரினால் அதிர்ச்சி அடைந்துள்ளன. தமது இழப்புக்கள் குறித்து சுற்பொழுது புரிந்து கொண்டுள்ள அவர்கள் பரஸ்பரக் குற்றச்சாட்டுகளைத் தமக்கு எதிரானவர்கள் மீதும், போர நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீதும் சுமத்தத் தொடங்கியுள்ளனர். தமது கடந்த கால அரசியல் நடவடிக்கைகள் இனப்பிரச்சினையில் ஏற்படுத்திய தாக்கம், விளைவித்த பாதிப்புக்கள் என்பனவற்றை மறைக்கப் பார்க்கின்றனர்.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் குறிப்பாக பத்திரிகைகள் இராணுவத்தின் தலைமைப்பீடம் மீது சிலவும் அரசாங்கத்தின் மீது சிலவும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி உள்ளன. இராணுவத்தின் தலைமைப்பீடத்தினதும், அரசாங்கத்தின் அசட்டைப் போக்குமே ஆனையிறவு முற்றுகை இடம்பெறவும் முற்றுகையை முறியடிக்க முடியாமல் போனதற்கும் காரணம் என குற்றம் சாட்டுகின்றன. சில பத்திரிகைகள் இராணுவம் யுத்தமுனையில் உண்மை நிலைவரங்களை அரசாங்கத்திற்கு இராணுவத் தலைமையகம் வெளியிடவில்லை எனத் தெரிவிக்கின்றன. இதனால் இராணுவத் தோல்விக்கு இராணுவமே காரணம் என்பது அவர்களின் வாதமாகும்.

அதேவேளை சிறிலங்கா எதிர்க்கட்சிகள் அரசாங்கம் இராணுவத்தினருக்கு தேவையான வசதிகளையும், நவீன இராணுவத் தளபாடங்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இதன் காரணமாகவே இராணுவத்தினர் நெருக்கடியில் சிக்கியுள்ளனர் எனக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

அவசரகால நீடிப்பு விவாதத்தில் பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி போரில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு அதி நவீன ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்றார். எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா யுத்தம் நடைபெற்றுவரும் வேளையில் அரசாங்கம் இராணுவத் தேவைகளை கவனிக்காமல் வெறும் கேளிக்கைகள் நடத்துவதில் கவனமாக உள்ளது என்றார்.

அரசாங்க தரப்போ இராணுவத்தினர் தீரத்துடன் போராடுகின்றனர் என்பதோடு புலிகளுக்கு ஏற்பட்ட சேதங்களை பெருமளவில் மிகைப்படுத்தி வெளியிட்டு வருவதோடு புலிகளுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பு உள்ளது என்பதைக் காட்ட முனைகின்றது. அதேவேளை இராணுவத்திற்கு ஆட்சேர்த்தல் மேலதிக இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்தல் போன்றவற்றில் தீவிரகவனம் செலுத்திக் கண்டனங்களைக் குறைக்கப் பார்க்கின்றது.

ஆனால், உண்மையில் சிறிலங்கா இராணுவம் எதிர்க்கட்சிகள் கூறுவது போன்றோ, அன்றி பத்திரிகைகள் குறை கூறுவது போன்றோ திறமை அற்றதாகவோ நவீன தளபாடவசதிகள் அற்றதாகவோ இல்லை உலகின் புகழ் பெற்ற உளவுப் படையாலும் மொசாட், ஷின் பெட்டாலும் -எஸ். ஏ. எஸ்- பயிற்றப்பட்ட இளைய வயதினரைக் கொண்டவர்கள். போர் முனைக்கேற்ற நவீன தளபாட வசதிகளையும் கொண்டவர்கள்.

ஆகையினால் எதிர்க்கட்சிகளினதும், பத்திரிகைகளினதும் குற்றச்சாட்டுகளைக் கொண்டு இராணுவத்தினரை நவீனப்படுத்துதல் மூலமோ அல்லது படையணியினரை அதிகரிப்பதன் மூலமோ தமிழர் பிரதேசங்களில் ஏற்படப் போகும் தோல்வியைத் தவிர்த்து விட முடியாது.

ஒரு போர்முனையின் வெற்றி தமது பலத்துடன் மட்டும் தொடர்புடையதல்ல. எதிரியின் பலத்துடனும் தொடர்புடையது. இப்போரில் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராகப் போராடும் விடுதலைப் புலிகள் - தமிழர்கள் - தமது உயிரையே பணயமாக வைத்துப் போராடுகின்றார்கள். புலிகளின் நவீன ஆயுதங்களை விட அவர்களின் மனோபலமே அவர்களுக்குக் கடந்த காலங்களில் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. இதைப்பல எதிரிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் புலிகள் - தமிழர் - தமது வெற்றிக்காக பணயம் வைப்பது தமது உயிரை. இதனைச் சிறிலங்கா இராணுவத்தால் வைக்க முடியுமா? முடியாது ஏனெனில் புலிகள் போராடுவது சுதந்திரத்திற்காக. ஆனால் இராணுவம் சண்டையிடுவது சம்பளத்திற்காகவும், ஆக்கிரமிப்பிற்காகவும். இவ்வேறுபாட்டினை பேரினவாத சக்திகள் முதலில் கருத்திற் கொள்ள வேண்டும்.

## மறு திகதி குறிப்பிடாது கூட்டத்தைப் பிற்போட்டமை

# அர. அதி. பொறுப்பற்ற செயல்

கடந்த பல மாதங்களாகவே யாழ் குடாநாட்டில் உணவுப் பற்றாக்குறை மோசமாகவே இருந்து வந்துள்ளது. இப்படியான நிலையில் ஆனையிறவு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபின் தரைவழி, கடல் வழியாவும் தடைசெய்யப்பட்டு அரச விநியோகமோ அல்லது தனியார்துறை விநியோகமோ இல்லாது மக்கள் உணவுப் பொருள்களுக்காக அலைகின்றார்கள் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் இக்குறிப்பில் மக்களுக்கான உணவு விநியோகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபர் தற்போதைய நிலைமை அராய நடவடிக்கை எடுக்காது நேற்று 27-07 1991 நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் விநியோகம் உணவு சம்பந்தமான செயலகக் கூட்டத்தையே மறு திகதி குறிப்பிடாது ஒத்திவைத்துள்ளார். தற்போதைய நிலையில் கப்பல் வருகின்றது என்று திருப்திப்படுவதைத் தவிர்த்து கடந்த 15 தினங்களாக சகல வழிகளிலும் உணவு விநியோகம் தடைப்பட்டிருந்ததமையை கவனத்தில் எடுத்து சகல மக்களுக்கும் அடுத்த இரண்டு வாரங்களுக்கான உணவுப் பொருள்களை பாகுபாடற்ற நிலையில் வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் யாழ். குடாநாட்டு மக்களின் நிலைமை கவனத்தில் எடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கப்பல்களை தருவிக்க நடவடிக்கை எடுத்தது போன்று அரசாங்க அதிபர் அடுத்த இரண்டு வாரங்களுக்கு தேவைகளுக்குரிய நிவாரணம் கிடைக்க ஆவன செய்வார் என எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படைப் படகுமீது குறிகாட்டுவானில் தாக்கு

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் இறங்குதுறையை நோக்கிவந்த சிறிலங்கா கடற்படை விசைப்படகொன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். அப்படகு சேதமடைந்த நிலையில் திரும்பிச் சென்றது.

கடந்த வியாழன் நயினாதீவு கடற்படை முகாமிலிருந்து வந்த படகே இவ்வாறு தாக்கப்பட்டதாகும். மேற்படி படகு பொருள்களை ஏற்றுவதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறையை நோக்கிவந்த பயணிகள் படகொன்றின் பின்னால் மறைந்துவந்து குறிகாட்டுவான் இறங்குதுறையை அண்மித்தபோது அதன்மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனையடுத்து படகு வேகமாகத் திரும்பிச் சென்றுவிட்டது. (22)

## வவுனியா நகரில் புளொட் மீது கட்டுப்பாடு

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்கா பொலிஸாருக்கும் புளொட் குழுவினருக்குமிடையே இடம்பெற்ற சிறு மோதல் நடவடிக்கைகளை அடுத்து தற்போது நகரில் புளொட் குழுவினரின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

வவுனியா நகரில் வீதியில் எதிரும் புதிருமாகச் சென்று கொண்டிருந்த பொலிஸார் ஒருவரும் புளொட் உறுப்பினர் ஒருவரும் தற்செயலாக மோதிக் கொண்டனராம். இதையடுத்து பொலிஸாருக்கும் புளொட் குழுவினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து புளொட் குழுவினரின் நடமாட்டம் வவுனியா நகரில் மிகக் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## சிங்கள ஊர்காவற்படை அட்டகாசம் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பகுதிகளில் சிங்கள ஊர்காவற்படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் புளியாலங்குளம் பகுதியில் தமிழ்ப் பொது மக்களின் ஆறு வீடுகள் ஊர்காவற்படையினரால் தீ வைத்து எரிக்கப்பட்டன. மற்றும் வீடுகளில் காணப்பட்ட பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் அவர்களால் சூறையாடப்பட்டுள்ளன.

செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் ஊர்காவற்படையினர் செயல்பட்டு வருவதாக செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். (தி)

## அதிகாரிகள் விளக்கம் திருப்திகரமாக இல்லை

### — சவான்

(டில்லி)

தமிழ் நாட்டில் குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நன்கு வேரூன்றி இருக்கின்றார்கள் என்றும் இதுபற்றித்தான் தனது அமைச்சரவை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாக உள்துறை அமைச்சர் சவான் கூறினார்.

சண்முகத்தின் பிரேத பரிசோதனை அறிக்கையில் இந்தப் பரிசோதனைக்குச் சுமார் 12 முதல் 18 மணி நேரத்துக்கு முன்னதாக தூக்குப்போட்டுக் கொண்டதால் அவர் மரணமுற்றதாகத் தெரிவிக்கிறது என்று கூறிய சவான், சண்முகம் விடுதியில் இருந்து தப்பியபோது அங்கு காவல் காத்துவந்த ஆயுதம் தாங்கிய காவலர் அவரை ஏன் துரத்திச் செல்லவில்லை என்றும், அவர் மீது ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என்பது குறித்துத் தாமே வியப்படைவதாகக் கூறினார்.

சண்முகத்தை நோக்கிச் சுட்டு அவரைக் காயப்படுத்தியிருக்கலாம் என்றும், இது தொடர்பாக அதிகாரிகள் தமக்குக் கொடுத்த விளக்கம் திருப்தியளிப்பதாக இல்லை என்றும், அவர் கூறினார்.

விமானத்திலிருந்தபடிவேதாரண்யத்தைச் சுற்றிப்பார்த்த போதிலும், சண்முகம் தூக்கில் தொங்கிய இடம் காடுகளால் சூழப் பட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது என்றார்.

விடுதியில் ஒரு துணைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு துணை இன்ஸ்பெக்டர், மூன்று புலனாய்வாளர்கள் உட்பட காவல்துறையினர் 8 பேர் சண்முகத்தைக் காவல் காத்து வந்தார்கள். இவர்களில் இருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தூங்கி வைத்திருந்தார்கள். ஆனால் ஒருவர் கூடச் சண்முகத்தைத் துரத்திப் பிடிக்க முயற்சிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சண்முகத்துக்கு நீலக்கரை வேட்டியும், கயிறும் எப்படிக் கிடைத்தன என்பது கண்டு பிடிக்கப் படவேண்டிய காரியமாகும் என்று தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலை பற்றிப் புலனாய்வு நடத்த தனிப் புலனாய்வுக் குழுவுக்கு அரசு இயன்ற வசதிகள் அனைத்தையும் அளித்துள்ளது. இந்தப் புலனாய்வுக் குழு நல்ல படி பணியாற்றி வருகிறது. அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டாம் என்று அவை உறுப்பினரை அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கொலை தொடர்பாகத் தனிப் புலனாய்வுக்குழு இதுவரை 145 சாட்சிகளை விசாரித்திருக்கிறது. 14 பேரைக் கைது செய்துள்ளதும், புலனாய்வுக் குழு, சிவராசனின் டயறியையும், தொலைத் தொடர்புக் கருவியையும் கைப்பற்றியுள்ளது என்று உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்தார்.

## ரஞ்சன் கார்மீதும் தற்கொலைத் தாக்குதலாம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் கார்மீது மேற்கொள்ளப் பட்ட கார்க்குண்டு வெடிப்பு தூரத்திலிருந்து இயக்க வைக்கும் கருவி மூலம் இயக்கவில்லை என சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இக் கார்க்குண்டு வெடிப்பு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை மூலமே நடாத்தப்பட்டது எனவும் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சகல தமிழ் குழுக்களிடமும் கருத்தறியவும்

(டில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசு ஒரு தனிப்பட்ட குழுவைச் சார்ந்து நிற்காது அனைத்துத் தமிழ்க்குழுக்களது கருத்துக்களையும் கண்டறிந்து செயல்பட வேண்டும் என்ற இந்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரோல்ட் ஹெராத் இந்தியா வரும்போது அவரிடம் இதனைத் தெரிவிக்க விருப்பதாக இந்தி வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரண

# உதவிகள் வழங்கவில்லை; செஞ்சிலுவை மகஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இம்மாவட்ட மக்கள் பெரும் சிரமங்களை தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக இம்மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளைத் தலைவர் பிரதம மந்திரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# ராஜீவ் மண்டபத்திற்கு 100 கோடி ரூபா ஒதுக்கீடு

ராஜீவ் காந்தி ஞாபகார்த்தமாக சிறிபெரம்புதூரில் மண்டபம் ஒன்றை கட்டுவதற்கு இந்திய வரவு செலவுத்திட்டத்தில் இருந்து மூன்று கோடி இருபத்தெட்டு லட்சம் டொலர் (100 கோடி ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்தாண்டுகளுக்கு வருடாந்தம் 75 லட்சம் டொலர் வீதம் இந்த மண்டபத்தை பராமரிக்கும் மன்றத்திற்கு மானியமாக வழங்கப்படும் என்றும் இந்த மன்றத்திற்கு திருமதி சோனியா காந்தி தலைவியாக இருப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இளம் குடும்பப் பெண் கழுத்துநெரித்து கொலை

(வேலணை)

மண்குண்பான் பள்ளிவாசலில் அகதிகளாக தங்கியிருந்த பெண் ஒருத்தி கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவ்வாறு இறந்து கிடக்கக் காணப்பட்ட இப்பெண் நாரந்தனை குரியவத்தையைச் சேர்ந்த திருமதி விமலர் அருள் சிங்கம் (வயது 25 என்னும் பெயருடையவர் ஆவார்.

இறந்த இப்பெண் திருமணம் செய்துபதின்மூன்று மாதங்கள் என்றும் குழந்தைகள் எதுவும் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இப் பெண்ணின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கணவனையும் அவருக்கு உடந்தையாக இருந்தவர் எனக் கருதப்படும் ஒருவரையும் தீவக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினர் கைது செய்துள்ளனர். மேலும் இக் கொலை தொடர்பாக இருவர் தேடப்படுகின்றனர். (14)

மீண்டும்

பகல் 2 மணியளவில் ஆறு கவச வாகனங்களின் உதவியுடன் ஆனையிறவு நோக்கி முன்னேற முற்பட்டனர்.

இந்த இராணுவப் படை அணியை எதிர்கொண்டு விடுதலைப்புலிகள் உக்கிரத்தாக்குதலைத் தொடுத்தனர். படையினரின் கவச வாகனங்களின்மீது றொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒரு கவச வாகனம் பலத்த சேதமடைந்தது. இதனைத்தொடர்ந்து பலத்த இராணுவ இழப்புக்களுடன் இவர்கள் பின்வாங்கிச் சென்றனர். இத்தாக்குதலின்போது இராணுவத் தரப்பில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டபோதினும் அவற்றின்சேத விபரங்கள் தெரியவரவில்லை.

புலிகள்

கள் திடீர்த்துப்பாக்கித் தாக்குதலை நடாத்தியதாலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக இறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம்காட்டி ரூபவாஹினி அறிவித்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை இரத்தினம்

திருமதி செல்லத்துரை இரத்தினம் அவர்கள் 27 - 07 - 91 சனிக்கிழமை அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், தங்கராசா, பரிமளதேவி, விமலராசா, புஸ்பகாந்தி, ஜெயராசா (கொலண்ட்), யோகராசா [கொலண்ட்], ஜெயசாந்தி [லிகிதர், சக்தி மின்தறிநிலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலராணி, ஈராஜசிங்கம், ஞானேஸ்வரி, சக்திவேல், மனுமதி ஆகியோரின் அன்பு மாமியும், சஜனி, ஜலஜன், தனுசா, தர்சினா, நிரோஜன், கபீஸ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [28 - 07 - 91] ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூவுடல் கரையான்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சங்கரப்பிள்ளைவீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
தங்கராசா (மகன்)

[R/1586]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அவசர கலந்துரையாடல்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று (28-07-1991) காலை 10-00 மணியளவில் மாவட்ட பொதுப்பணி மன்றத்தில் நடைபெறவுள்ளதால் சகல உறுப்பினர்களும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# இன்று பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை சன சமூக நிலையங்களின் சமாசத்தின் விஷேட பொதுக்கூட்டம் இன்று 28-07-91 ஞாயிற்றுக் கிழமை காலை 9 00 மணிக்கு யாழ் புனித மரியாள் மகா வித்தியாலயத்தில் (யாழ். அடைக்கல மாதா கோயில், 4 ஆம் குறுக்குத்தெரு) சமாசத் தலைவர் திரு. கே.தியாகராசா தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்குத் தலைவர் அல்லது செயலாளர், கவிச பிரிவு ஒருவரும், இன்னொரு பிரதிநிதி உட்பட மூன்றுபேர் சமூகம் தரும்படி கேட்கப்படுகின்றனர். (24)

குண்டு வீச்சால

ஆலய மண்டப கூரையின் ஓடுகள் சேதத்திற்குள்ளானதும் ஆலய மடமொன்றும் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (25)

ஆனையிறவு

ளைச் சந்தித்த சில பெற்றோர்கள், அவமானப்படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று செய்தி கிடைத்துள்ளது.

மேற்படி இராணுவத்தினரின் தற்போதைய நிலையற்றி வேதனையுடன் பெற்றோர்கள் விசாரித்தனராம். ஆனால் இந்தப் பெற்றோர்களின் சந்திப்பை இராணுவ அதிகாரிகள் அசட்டை செய்துள்ளனர்.

வவுனியா இராணுவ இணைப்பதிகாரியும் மேலதிக அரசாங்க அதிபருமான கேணல் ரத்னாயகாவுடன் தொடர்பு கொண்ட பெற்றோர்கள் கவலையுடன் திரும்பிச் சென்றுள்ளனர்.

அடைபட்டுள்ள இராணுவத்தினரின் ஊதியப் பணம் தேவையாயின் அதை ஜோசெப் இராணுவ முகாமில் பெற்றுச் செல்லும்படியும் வேறு விடயம் பற்றி தம்மை எதுவும் கேட்க வேண்டாம் என்றுஞ்சில இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனராம்.

வேதனையுடன் வந்த பெற்றோர்கள் அவமதிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து சிங்களப் பகுதிகளில் அரசாங்கத்திற் கெதிராகவும், இராணுவ மேலிடத்திற் கெதிராகவும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டிருப்பதாக வேறொரு தகவல் தெரிவிக்கின்றது.

ஆனையிறவு இராணுவத்தினரின் நிலை தொடர்ந்து தேசியில் நீடிக்குமாயின் சிங்கள மக்கள் அரசின் நடவடிக்கைக்கு எதிராக செயற்பட வேண்டிய நிலை ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. (நி)

இராணுவத்தினரை

அதிகாரிகள் கொண்ட மருத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இவ் வைத்தியசாலைகளில் தற்போது மேலதிக வைத்திய வசதிக்கான விரிவான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை அனுராதபுர, கொழும்பு ஆஸ்பத்திரிகளில் இதற்கு முன்னரே இராணுவத்தினருக்குவிசேட வாட்டுக்களும், வைத்திய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஆனையிறவு மோதலில் பலநூறு இராணுவத்தினர் காயமடைந்ததை தொடர்ந்தே தற்பொழுது மேலும் இந்த விசேட வைத்தியக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

# அஷ்ரப்பிற்கு ஏற்பட்ட காலம் கடந்த ஞானோதயம்

(கொழும்பு)

அம்பாறை முஸ்லிம்களும், தமிழரும் சேர்ந்துதமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழும் மாவட்டமாகும் அந்த மாவட்டத்தில் அரசின் விகிதாசாரக் கொள்கையின்படி கூட ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் எம். பிக்கள் எவருடனும் இதுபற்றி கலந்தாலோசிக்காமல் ஐ தே க; சு க எம். பிக்களுடன் மாத்திரம் கலந்தாலோசனை நடத்தி பிரத்தியேக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாராளுமன்றக் கட்டடத்தில் சபாநாயகர் தலைமையில் நடந்த அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம். எச் எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் ஐ தே. க. வில் உள்ள முஸ்லிம் அமைச்சருக்குக் கூட இந்த நியமனங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

# பலாலி இளைஞர் சுவிஸில் மரணம்

சுவிஸுக்குச் சென்ற பலாலி இளைஞரொருவர் நீரில்மூழ்கி மரணமானார்.

பலாலி வடக்கைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை குணரத்தினம் (வயது 22) என்ற இளைஞரே நீந்தும் போது நீரில் மூழ்கி மரணமானவராவார் இவர் மரணமான சம்பவம் செஞ்சிலுவைச் சங்க மூலம் இவரது பெற்றோர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டிருந்தது. (25)

அரசு கூறுவதை

கடந்த ஒரு வருடத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் நடக்கும் மிகப் பெரிய சண்டை இது என்பது மட்டும் உணரப்பட்டிருக்கின்றது.

இந்தச் சண்டையில் இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கான வீரர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். அரசு இப்பகுதிக்கு கூடுதலான இராணுவத்தினரை அனுப்பி வருகின்றது.

விடுதலைப் புலிகளை வெளியே வரப்பண்ணும் இச் சந்தர்ப்பம் தமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருவதாகஇராணுவத்தினர் கூறுகின்றனர். வலுவான நிலையில் இருந்து இராணுவத்தினர் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தவதாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

கடந்த இருபது நாட்களாக இப்பகுதியில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் விடுதலைப் புலிகளை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பது விவாதத்திற்குரியது. ஆனால் இக்காலப்பகுதியில் வடபகுதிக்கு உணவு மருந்துப் பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை. இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் ஆனையிறவில் படையினர் நீண்ட நாட்கள் சிக்கியிருப்பதால் அரசுக்கு ஏற்பட்ட சீற்றத்தையே காட்டுகின்றன. இத்தாக்குதல்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அதேவேளை இராணுவ முகாம் விடுவிக்கப்பட்டுவிடும் என்று இராணுவ அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்ற அதே வேளை இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று கணிப்பதற்கோ அல்லது கூறுவதற்கோ இராணுவ அதிகாரிகள் மறுக்கின்றனர். இந்தச் சண்டை இராணுவத்தின் திட்டப்படி நடந்துகொண்டிருப்பதாகத் தான் நம்பவில்லை என்று கொழும்பில் உள்ள ஓய்வுபெற்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார் எனவும் பி பி ஸி தெரிவித்தது.

பதிவு

பானிடம் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் இதுவரை 2200 அகதிகள் பதிவு செய்யாமலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், தனியான முகாம்களில் வைக்கப்படுவோர் கண்காணிக்கப்படுவர் என்றும், அவர்கள் வெளியே நடமாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் கூறினார். பதிவு செய்யாத இலங்கைத் தமிழ் அகதிகளை கண்டறியும் பணி தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஷெல் வீச்சு

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் ஷெல் விழுந்து வெடித்ததால் வீடு ஒன்றும் தென்னை மரங்கள் சிலவும் சேதமடைந்தன 86

11 கரையோர

இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா இரண்டு காவல் நிலையங்களும், ஏனைய ஏழு மாவட்டங்களில் தலா ஒவ்வொரு காவல் நிலையமும் அமைக்கப்படும் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தலா பதினைந்து காவலர்களை ஏற்றிச்செல்லக்கூடிய இரண்டு படகுகளும், போதுமான காவலர்களும் இருக்க வகை செய்யப்படும். தற்போது முப்பத்து நான்கு இடங்களில் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் பத்து அணிகளும், மத்திய றிசேர்வ்படையின் பத்து அணிகளும் பணியிலீடுபடுத்தப்பட்டிருப்பதாகவும்குறிப்பிட்டார்.

தமிழக பொலிஸார் கைப்பற்றிய ஐம்பது படகுகளில் இருபது படகுகள் கடலோரக் காவல் படைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கூறினார்.

ஆனையிறவில் தொடர்ந்து

ண்டு அவ்ரோ, இரண்டு பொம்மர்கள், வை-12, வை-8 விமானங்கள் ஆகியன ஈடுபட்டன. இத்தாக்குதல்கள் இயக்கச்சி, சரந்தாய் குளம், சங்கத்தார் வயல் ஆகிய பகுதிகளை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டன. இதனால் இயக்கச்சிப் பகுதியில் பாடசாலை ஒன்று சேதமடைந்தது. வை-8 வீசிய பீப்பாக் குண்டினால் சரந்தாய்க்குளம் பகுதியில் உள்ள கடை ஒன்று எரிந்து சாம்பராகியது.

புலிகளின் காவலரண்களுக்கு மிக அண்மையில் ஒரு சிலயார் இடைவெளியில் வீழ்ந்த சில குண்டுகள் வெடிக்காததனால் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியதாகத் தெரியவருகிறது இதேவேளை நேற்று மாலை 5 20 மணியளவில் கண்டிவீதியின் இருமருங்கிலும் மீசாலை பகுதியில் விமானங்கள் அணிவகுத்துச் சென்றன. இதனைப் பல பொதுமக்கள் வீதிகளில் நின்று பார்வையிட்டனர்.

துணைப்படையினரை

இத்தினத்தில் சமூகமளிக்க முடியாதவர்கள் 29 07 91 நாளை நண்பகல் 12.00 மணிக்கு இச் செயலகத்திற்கு சமூகம் கொடுக்கும்படியும்,

தென்மராட்சி பிரிவைச் சேர்ந்த துணைப்படைப் பயிற்சி பெற்றவர்களும் பெற விரும்புவோரும் 29 7 91 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சமூகம் கொடுக்கும்படியும்

மேற்படி தினத்தில் சமூகமளிக்கத் தவறுவோர் 30 07 91 ஆம் திகதி 12 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு சமூகம் கொடுக்கும் படியும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகம் வேண்டிக் கொள்கின்றது.